மன்றப்பொருள்

2020 ம் ஆண்டு நவம்பர் 03.11.2020 ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற **அவசரக்கூட்டம்** பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.

**திரு.எஸ். பிரபாகரன்**
**தனி அலுவலர்.**

1. பண்ருட்டி நகராட்சிக்குட்பட்ட வடகைலாசம் பகுதி வீராணம் ரோட்டில் சர்வே எண் 208/பகுதி, 209/பகுதியில் Community hall விட்ட அனுமதி கோரி திருமதி. இ.ஜானகி மற்றும் மூவர் விண்ணப்ப. செய்திருந்த நிலையில் நகரமைப்பு உதவி இயக்குநரால் திருப்பி அனுப்பப்பட்டது. எனவே, மனுதாரர் விண்ணப்பத்தின் அடிப்படையில் அன்னார் செலுத்திய ரூ.72,000/–த்தில் இருந்து ஆய்வு கட்டணம் நீங்கலாக (ரூ.3000/–) ரூ.69,000/–ஐ திருமதி. கே.ஜானகி என்பவருக்கு வழங்க மன்றம் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.நகர் ஊரமைப்பு இயக்குநர், கட்டிட அனுமதி திருப்பப்பட்ட நிலையில் மனுதாரருக்கு ஆய்வு கட்டணம் நீங்கலாக ரூ.72,000–ரூ.3000= ரூ.69,000/–ஐ வழங்க ஆணையர் அனுமதி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 73 /2016/எப்1**

2. பண்ருட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு பி, பிளாக்–51, நகரளவு எண். 10/1, பழைய சர்வே எண். 14/1, பரப்பு 7400 ச.மீ. இடம் வருவாய்த்துறை கடிதத்தில் தோப்பு புறம்போக்கு இடத்தினை இலவச வீட்டு மனை பட்டா வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதால், மேற்படி புல எண். இடம் தோப்பு புறம்போக்கு என உள்ளதை நத்தமாக மாற்ற (Change of Land Classification) கோரி கடிதம் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பண்ருட்டி வட்டாட்சியர் ந.க.எண். ஆ4/960/2020 நாள். 03.11.2020 தேதியிட்ட கடிதத்தில் தோப்பு புறம்போக்கு என தெரிவித்து நில வகைப்பாடு நத்தமாக மாற்ற தீர்மானம் கோரியுள்ளார். ஆனால், நகர் சார் ஆய்வர் 03.11.2020–ந் தேதிய அறிக்கையின்படி தோப்பு புறம்போக்கு 7400 ச.மீ. உள்ளது என தெரிவித்துள்ளார். எனவே, தோப்பு புறம்போக்கிலிருந்து நத்தமாக மாற்றம் செய்ய ஆட்சேபனை இல்லை என தெரிவிக்கலாம்.

**கோ.எண். 1799/2020/எப்1**

3. பண்ணுருட்டி நகராட்சியில் இளம் பொறியியல் பட்டதாரிகளுக்கு Internship Training பயிற்சி பண்ணுருட்டி நகராட்சியில் அறிவிக்கப்படும் என்பதை தினசரி நாளிதழில் மாவட்ட அளவில் ஒரு தமிழ் தினசரி நாளிதழில் ஒருநாள் மட்டும் 50 சதுர சென்டிமீட்டர் பரப்பிற்கு மிகாமல் பிரசுரம் செய்யக்கோரி செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர் அவர்களுக்கு அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்கண்ட பயிற்சி விளம்பரத்தை ‘Dharma Ads’ என்ற நிறுவனம் மூலம் ‘இந்து தமிழ் திசை’ தினசரி பத்திரிக்கையாளர் பிரசுரம் செய்யப்பட்டு, இதற்கான பட்டியல் கேட்டு பட்டியல் எண்.15 நாள். 31.08.2020–ம் தேதிய பட்டியலில் ரூ.8568/–ஐ கேட்டு பட்டியல் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.,

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 1025/2020/இ1**

4. பண்ணுருட்டி நகராட்சி ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் (ICDS) கடலூர் மாவட்டம், அங்கன்வாடி மையங்கள் 2019–20–ம் ஆண்டு தரம் உயர்த்துதல் மற்றும் பழுது நீக்குதல் பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர் அவர்களின் செயல்முறை ந.க.எண். அ3/2466/2020 நாள். 02.11.2020–ந் தேதியிட்ட கடிதத்தில் வரிசை எண். 45–ல் பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 32, சீரங்குப்பம் அங்கன்வாடி மையத்தில் பழுது நீக்கம் செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 2,00,000/– (ரூபாய் இரண்டு லட்சம்) மட்டும் நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவு வரப்பெற்றுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண். 1153/இ1/2020

5. . பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் உள்ள சிறுபாலங்கள் மற்றும் சாலைகளில் பள்ளம் ஏற்பட்டு, பொதுமக்களின் போக்குவரத்திற்கு அச்சம் விளைவிக்கும் வண்ணம் உள்ளதாக வந்த புகாரின் அடிப்படையிலும், இந்நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஆய்வின் அறிவுறுத்தலின்படி கீழ்கண்ட இடங்கள் நேராய்வு செய்யப்பட்டது.

1. வார்டு எண்.27, ஆதிப்பிள்ளை தெருவில் உள்ள பழுதடைந்த சிறுபாலம் (Over slab)
2. வார்டு எண்.03, சக்தி ஐ.டி.ஐ. எதிர்புறம் உள்ள பழுதடைந்த சிறுபாலம்.
3. வார்டு எண்.09. திருவள்ளுவர் நகர் பகுதியில் உள்ள பழுதடைந்த சிறுபாலம் (Over slab)
4. வார்டு எண்.26 சொள்ளை சபாபதி தெருவில் உள்ள சிறுபாலம்.
5. காந்தி ரோடு நான்குமுனை சாலை சந்திப்பு (மணிக்கூண்டு) அருகில் உள்ள பழுதடைந்த சாலை (Over slab)
6. வார்டு 03, காந்தி ரோடு விழமங்கலம் சாலை சந்திப்பில் உள்ள சிறுபாலம் ம் (Over slab)

மேற்கண்ட சாலைகளில் உள்ள பழுதடைந்த சிறுபாலங்கள் மற்றும் பழுதடைந்த சாலைகளை சீரமைக்க மதிப்பீடு ரூ.1.80 இலட்சம் (ரூபாய் ஒரு லட்சத்து எண்பதாயிரம்) மட்டும் தயார் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 1752/இ1/2020**

6. பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்திற்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN 31 AH 7374–க்கு காப்பீடு 2019–20–ம் ஆண்டிற்கு 10.11.2020 அன்றுடன் (Insurance) காப்பீடு சான்று முடிவடைகிறது. 2020–21–ம் ஆண்டிற்கு காப்பீடு புதுப்பிக்க வேண்டியுள்ளதால் யுனைடெட் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தின் கூற்றின்படி மேற்கண்ட ஈப்பு வாகனம் TN 31 AH 7374–க்கு காப்புச் சான்று புதுப்பித்தல் கட்டணம் ரூ.12,416/– (ரூபாய் பனிரெண்டாயிரத்து நானூற்று பதினாறு) மட்டும் மேற்கண்ட நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய அவசியம் கருதி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 1807/2020/இ1**

இடம்– பண்ணுருட்டி நகராட்சி
நாள்– 03–11–2020

ஆணையாளர் (ம) தனி அலுவலர்
பண்ணுருட்டி நகராட்சி